திரு. ஆர். சாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அணுகு சாலையை அமைக்க மத்திய அரசு ஏற்கனவே ஒதுக்கியுள்ள மதிப்பீட்டுத் தொகையைச் செலவிடுவதிலே இன்னும் காலதாமதம் ஆனால் மாநில அரசே அந்தத் தொகையை ஏற்க வேண்டிய நிலைமை ஏற்படும். எனவே, மத்திய அரசு விரைவில் அந்த டெண்டர் மூலம் அதை விரைவில் எடுக்கச் சொல்லி, நிலத்தைக் கையகப்படுத்தி, அணுகு சாலையை அமைக்க விரைவல் அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலத்தை உடனே எடுப்பதில் அரசுக்கு ஒன்றும் தயக்கம் இல்லை. ஆனால் நீதிமன்றம் என்ற ஒன்று இடையிலே இருக்கிறது. அவர்கள் எதற்கும் ஸ்டே கொடுத்து விடுகிறார்கள். மறுபடியும் ஸ்டேயை வெக்கேட் பண்ண வேண்டும். அதற்குள் சிறிது கால தாமதம் ஆகிவிடுகிறது. ஆகவே, இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றன. இருந்தாலும் அந்த நிலைமை ஏற்படாது. ஏற்பட்டாலும் அரசு அதை பார்த்துக் கொள்ளும்.

மதுரை-கொச்சி தேசிய நெடுஞ்சாலை.

*5961—திரு. நா. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை-கொச்சி தேசிய நெடுஞ்சாலைப் பாதையை கம்பம்-கம்பம்மெட்டு வழியாக அமைக்க மத்திய அரசுக்குப் பரிந்துரைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தொண்டி-மதுரை-தேனி-கம்பம்- கோட்டம்-கொச்சி சாலையை தேசிய நெடுஞ்சாலையாக உயர்த்துமாறு 26—12—1989 அன்று மைய அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. மைய அரசின் முடிவு எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. நா. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் அந்தச் சாலை வழியாக வரும்போது, அந்தச்சாலையின் நிலைமையை நன்றாகப் பார்த்து உணர்ந்துள்ளார்கள். அதுமட்டுமல்லாமல்,

இச்சாலை கேரளா மாநிலத்தை இணைக்கின்ற முக்கிய சாலை என்பதாலும், கம்பம்—கூடலூர் போன்ற பெரு நகரங்களை இணைக்கின்ற முக்கிய சாலை என்பதாலும், இந்திய நாட்டுக்கு 50 கோடி ரூபாய்க்கு மேல் அந்நியச் செலவாணியை ஈட்டித் தருகின்ற ஏலம், மிளகு, இஞ்சி போன்றவற்றை உற்பத்தி செய்கின்ற விவசாய மக்கள் பயன்பெறும் வகையிலும், அந்தப் பகுதியிலே சுற்றுலா மையங்களான சுருளி நீர் வீழ்ச்சி, மேகமலை, கண்ணகி கோட்டம் போன்றவை இருப்பதாலும், வருகின்ற ஆண்டிலே மத்திய அரசுக்கு நினைவூட்டுகின்ற வகையில் கடிதம் எழுதி அந்த நெடுஞ்சாலையை அமைக்க அரசு வழிவகை வகுக்குமா?

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமகிருஷ்ணன் அவர்கள் இப்படிப்பட்ட கேள்வி ஒன்றைக் கேட்பார்கள் என்றுதான் அரசு ஏற்கெனவே 26-12-1989 அன்றுமத்திய அரசுக்கு இந்தச் சாலையை தேசிய நெடுஞ்சாலையாக எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நானே நேரிலே சென்று மத்திய அமைச்சரைப் பார்த்துக் கடிதத்தைக் கொடுத்திருக்கிறேன். அந்தச் சாலை மட்டுமல்லாமல், நாகப்பட்டினத்திலிருந்து கூடலூர் வரை தஞ்சை திருச்சி வழியாக சாலை. கடலூரிலிருந்து சேலம் வழி உளுந் தூர்ப்பேட்டை, திருச்சியிலிருந்து மதுரை வழி விராலிமலை. திருச்சியிலிருந்து இராமநாதபுரம் வழி புதுக்கோட்டை காரைக்குடி, திண்டுக்கல்லில் இருந்து கோயம்புத் தூர் வழி உடுமலைப்பேட்டை, பொள்ளாச்சி. கடலூரிலிருந்து சித்தூர் வழி வேலூர். மதுரையிலிருந்து தூத்துக்குடி வழி அருப்புக் கோட்டை, கிழக்குக் கடற்கரைச் சாலை. அதையடுத்து, பெரம்பலூரிலிருந்து மானாமதுரை, தொண்டி, மதுரை, தேனி, கம்பத்திலிருந்து கொச்சி வரையில். மதுரை, தென்காசி, கொல்லம் சாலை. திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி சாலை. திருநெல்வேலியிலிருந்து செங்கோட்டை சாலை. மதுரை, அம்மை நாயக்கனூர், கங்குவார்ப்பட்டி, கொடைக்கானல் சாலை. தோப்பூர், மேட்டூர், பவானி சாலை. வாணியம்பாடி, திருப்பத் தூர், தர்மபுரி சாலை ஆகிய இந்தச் சாலைகளை எல்லாம் தேசிய நெடுஞ்சாலைகளாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று மத்திய அமைச்சர் திரு. உன்னிகிருஷ்ணன் அவர்களைப் பார்த்து, கடிதத்தைக் கொடுத்து, நான் விரிவாகப் பேசியிருக்கிறேன். திரு. உன்னிகிருஷ்ணன் அவர்கள் இங்கே வந்திருந்த நேரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட அவர்களிடத்தில் இது குறித்து பேசியிருக்கிறார்கள். எனவே, மத்திய அரசின் ஆய்வில் இது இருக்கிறது. மத்திய அரசு விரைவில் சாதகமான பதில் தரும் என்று எதிர்பார்க்கிறோம்.

திரு. நா. இராமகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனுமதிக்கப்பட்ட மதுரை-கொச்சி சாலை தற்சமயம் போடி வழியாக செல்கிறது. போடி மக்கள் அதிர்ஷ்டம்

1990 ஏப்ரல் 11]

வாய்ந்தவர்கள். ஆகவே, அந்த அதிர்ஷ்டம் கம்பம் தொகுதிக்கும் வர வேண்டும் என்ற காரணத்தினாலே போடியிலிருந்து தற்சமயம் குமுளி வரையாவது இந்தத் தேசிய நெடுஞ்சாலையைப் போட அரசு மீண்டும் கடிதத் தொடர்பு கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

9–30 மணி

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவரவர்களே, போடி வரையில்லை. மதுரையிலிருந்து தேனி-கம்பம்-கோட்டயம் சாலையையும் போடுவதற்குத்தான் அரசுவழியாக முழு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது.

திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை-கொச்சி தேசிய நெடுஞ்சாலை போடி வழியாகச் செல்வதா, கம்பம் வழியாகச் செல்வதா என்ற ஆய்வில் போடி வழியாகச் சென்றால் சுமார் 71 கிலோ மீட்டர் தூரம் மலைப் பாதையில் குறைவாக இருப்பது தெரிந்து, போடி வழியாகச் செல்ல மத்திய அரசு அனுமதி வழங்கி, தேனியைத் தலைமையிடமாகக் கொண்டு, போடி வழியாகச் செல்வதற்கு தேசிய நெடுஞ்சாலைத் துறையால் வேலைகள் தொடங்கப்பட்டு, நடைபெற்று வருவதாகத் தெரிய வருகிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் கம்பம் வழியாக அதை மாற்றுவதற்கு அரசிடம் பரிசீலனை உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவரவர்களே, ஏற்கெனவே இருப்பது, அது அப்படியே இருக்கும். அது ரைட்டிலே போவது. திரு. இராமகிருஷ்ணன் சொல்வது லெப்டிலே போவது. அந்தச் சாலையை எடுக்கச் சொல்லிக் கேட்டிருக்கிறோம்.

திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்திய சாலைகளில் நாகப்பட்டினம்-கூடலூர் சாலையும் ஒன்று. அங்கே ஓ.என்.ஜி.சி. பணிகள் காரணத்தாலும், தஞ்சை மாவட்டத்திலே மத்திய அரசினுடைய சாலை எதுவும் இல்லாத காரணத்தாலும் நாகப்பட்டினம்-கூடலூர் சாலைக்கு முன்னுரிமை வழங்க மத்திய அரசை நம்முடைய அரசு வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு தலைவரவர்களே, நாங்கள் மத்திய அரசினுடைய அமைச்சர் அவர்களிடத்தில் எழுதிக் கொடுத்துள்ள 16 சாலைகளில், முதல் பிரையாரிட்டி—நெம்பர் 1—நாகை-கூடலூர் சாலைதான்.